[1995 மே 3

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *533*, திருமதி க. பழனியம்மாள், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

533—

பள்ளிக் கட்டிடங்கள் சீரமைக்கும் பணி

19085*—திருமதி க. பழனியம்மாள்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் சீரமைக்கப்படும் பணியை மாவட்ட ஆட்சியர் நிர்வாகத்தின் கீழ்க்கொண்டு வர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசிடம் செயற்குறிப்பு இல்லை.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிக் கட்டிடங்களைச் சீரமைக்க வேண்டுமென்றால், பொதுப்பணித் துறைக்குச் சொல்லி, அவர்களிடமிருந்து மாவட்ட ஆட்சித் தலைவருக்குச் சென்று, அவை சிறுசிறு வேலைகளாக இருந்தாலும்கூட அப்பணிகளைச் செய்து முடிப்பதற்கு, மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, இதனைக் கருத்திற்கொண்டு, மாவட்ட ஆட்சித் தலைவரிடமே இந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டால் விரைவிலே அவை செய்து முடிக்கப்படுமென்ற காரணத்தினால், இதனை அரசு மறுபரிசிலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது கொள்கை முடிவு எடுக்க வேண்டிய விஷயம். ஆகவே, இதுகுறித்து செயற்குறிப்பு இப்போது இல்லை.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோலவே, இப்போது உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால், மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ் மட்டும்தான் இது எடுத்துக்கொள்ளப்படுகிறது. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தில்

1995 மே 3]

இதைக் கொண்டு வந்தால், இப்போது தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் எல்லாம் நிறைவு பெற்றிருக்கிற காரணத்தினால், உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப்பள்ளிக் கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்க வசதியாக இருக்கும். இதை அரசு பரிசீலனை செய்து, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ், இந்தக் கட்டடங்களையும் எடுத்துக்கொள்ள வகை செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகள் அதற்கு இடம் தரவில்லை. மாவட்ட பரவலாக்கப்பட்ட திட்டத்தின்கீழ்தான், உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளுக்குத் தற்போது கட்டிடங்கள் கட்டடப்பட்டு வருகின்றன. இந்த நிலை தொடரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்.

முற்பகல் 10–45

டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிக் கட்டிடங்கள் எல்லாம் இப்போது அரசு உத்திரவுப்படி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக சமூகசேவை நிறுவனங்கள் மற்றும் தனியார் சமூக நிறுவனங்கள் மூலமாக கட்டிக்கொடுக்க வேண்டும்; அதன் மூலமாக பெற்றோர்–ஆசிரியர் சங்கமும் இணைந்து செயல்பட வேண்டும்; இவர்கள் இருவரும் அந்தக் கட்டிடங்களைக் கட்ட வேண்டும் என்று விதி இருந்தும் இப்படிப்பட்ட சமூகசேவை நிறுவனங்கள் தனியாருடைய கட்டிடக் கலைஞர்கள் மூலமாக கட்டுவதை அரசு அறியுமா ? அல்லது ஏதாவது மாற்று ஏற்பாடு இருக்கிறதா? இதன் மூலமாக அங்கு உள்ளூர் பிரச்சினைகள் ஏற்படுகின்ற சூழ்நிலை உள்ளது. இதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டு நிறுவனங்கள் மற்றும் பெற்றோர்–ஆசிரியர் கழகங்கள் இதிலே ஈடுபாடு காட்ட வேணடும் என்பதற்காகத்தான் அரசு இந்த முடிவு எடுத்து இருக்கிறது. எல்லா இடங்களிலும் இது சரியாக நடைபெறுகிறது. குறிப்பிட்ட சில இடங்களிலே பிரச்சினைகள் இருக்குமானால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவந்தால் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. சீனிவாசன்

திரு. கு. சீனிவாசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளி கட்டிடங்களை 'டீ-சென்ட்ரலைசேஷன் பிளான்'-ல்தான் கட்ட முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலே இங்கே வழங்கப்படுகின்ற பட்ஜெட்டிலே நான்கில் ஒரு பங்கை கல்வித் துறைக்கு ஒதுக்கி இருக்கின்ற காரணத்தினால், இவ்வளவு பெரும் தொகையைச் செலவு செய்து நாட்டிலே கல்வி அறிவை வளர்க்கின்ற ஒரு நல்ல திட்டத்திலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே இந்தக் கட்டிடங்களைப் பராமரிப்பதற்கு தனியாக ஒரு என்ஜினியரிங் செக்ஷன் ஆரம்பிக்கப்படுமா; அவர்களிடம் அந்தப் பணி ஒப்படைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கில் ஒரு பங்கு வரவு-செலவுத் திட்டத்திலே கல்விக்காக ஒதுக்கப்பட்டாலும்கூட அதிலே 90 விழுக்காடு ஊதியத்திற்காகவே செலவிடப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மீதி தொகையிலே தான் கட்டிடங்கள் கட்டுகின்ற பணி நடைபெறமுடியும்; சீரமைக்கின்ற பணி நடைபெற முடியும். இதற்கென்று தனியாக ஒரு பிரிவு ஏற்படுத்தும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 534, திருமதி டி. சக்குபாய் தேவராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

534—

திருவள்ளூரில் அரசு கலைக்கல்லூரி துவக்குதல்

33658—திருமதி டி. சக்குபாய் தேவராஜ்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம், திருவள்ளூர் நகரத்தில் புதியதாக அரசு கலைக்கல்லூரி ஒன்று துவங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இல்லை.